JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 102/2018 |
| | : | Prosecution P.W -- 1 |
| NAME | : | Jeya Lakshmi |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 12.10.2021.

மு.வி

நான் தற்போது சேர்ந்தமரத்தில் எங்கள் அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன், ஆஜர் எதிரி என் கணவர் ஆவார், கடந்த 6 வருடத்திற்கு முன்பு மாலை 04.00 மணியளவில் நான் கடையநல்லூரில் என் கணவர் வீட்டில் இருக்கும் போது என் கணவர் என்னை அசிங்கமாக ஏசிக்கொண்டு கல்லை கொண்டு தலையில் பின்பகுதியில் அடித்து காயப்படுத்தினார், அப்போது எதிரியுடன் சேகரும் மற்றும் சாமிநாதன் என்பவரும் இருந்தார்கள், சேகர் மற்றும் சாமிநாதனும் எதிரியை விலக்கிவிட்டு என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பின் நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் இருக்கும் போது ஆஜர் எதிரி வழக்கை வாபஸ் வாங்கு என்று சொல்லி அவர்களது உறவினர் நான்கு பேரை அழைத்து வந்தார், நான் வழக்கை வாபஸ் வாங்கமாட்டேன்

என்று சொல்லிவிட்டேன், எனக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் 7 தையல்கள் போட்டார்கள், நான் மொத்தம் 9 நாள்கள் சிகிச்சையில் இருந்தேன். அங்கு வந்த கடையநல்லூர் போலிசாரிடம் நான் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள், அந்த புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடயதுதான், அந்த புகார் வாக்குமூலம் அ,சா,ஆ,1 ஆக குறீயீடு செய்யப்படுகிறது, இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு/வி

( எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை).